திரு. மா. இராசாங்கம்: தலைவர் அவர்களே, சுயமரியாதை கலப்புத் திருமணங்கள் முடிந்தபின் பின்தங்கிய வகுப்பினருக்குக் கிடைக்கும் சர்க்கார் சலுகைகள், உதவிப் பணம் போன்றவைகளில் ஏதாவது சிக்கல் ஏற்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட சிக்கல் இருந்தால் அது பரிசீலிக்கப்படும்.

பெண்களின் திருமண வயது

*60. **வினா.—திரு. கரு. சீமைச்சாமி:** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பெண்களின் திருமண வயதை உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: குடும்பக் கட்டுப்பாடு குறித்துத் தீவிரமான பிரசாரம் செய்யப்பட்டுக் கொண்டு வருகிறது. அதனால் பெண்களின் திருமண வயதை உயர்த்தினால் ஓரளவிற்கு ஜனத் தொகைப் பெருக்கம் குறையும் என்று சொல்லப்படுகிறதே, இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெண்களுடைய திருமண வயது, பெண்களுடைய உணர்ச்சி, உடல் கட்டு இவற்றைப் பொருத்திருக்கிறது. இது அவரவருடைய விருப்பத்தை ஒட்டியது. பொதுவாக வயதில் குறைந்த பெண்களுக்குத் திருமணம் செய்வது 1929-ம் ஆண்டு சட்டப்படி தடை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னர், 1955-ம் ஆண்டு இந்துச் சட்டங்களெல்லாம் தொகுக்கப்பட்டபோது, இந்த வயது வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார், குடும்பக் கட்டுப்பாட்டுடன் இணைத்து இதைப் பரிசீலித்து வருகிறார்கள். இந்த அரசாங்கத்திடம் அது பற்றி யோசனை கேட்டால் அப்பொழுது பரிசீலிக்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்த வேண்டும் என்ற ஒரு முறையில்தான் இந்தக் கேள்வி என்று நான் நினைக்கிறேன். ஜில்லா போர்டு இருந்த காலத்தில், கணவனும் மனைவியுமாக ஆசிரியர்கள் இருந்தால், அவர்கள் இருவரையும் ஒரே பள்ளியில் வைத்திராமல், மலைக்கும் மடுவுக்கும் உள்ள தூரத்தைப் போல, ஆசிரியரை ஜில்லாவின் ஒரு மூலைக்கும், ஆசிரியையை இன்னொரு மூலைக்கும் மாற்றி மாற்றிப் போடுவார்கள்,

1967 ஜூன் 23]

அம்மாதிரியே இந்த அரசாங்கமும் கணவனையும் மனைவியையும் பிரித்து, ஆசிரிய ஆசிரியைகளை வெவ்வேறு இடங்களில் பிரித்து வைத்துக்கொள்ளுவதற்கு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட கொடுமைகளை இந்த அரசாங்கம் செய்யத் தயாராக இல்லை.

THIRU K. VINAYAKAM : Before embarking on a legislation of this kind or before the Government take a decision to raise the age of marriage for girls, will the Government consult the girls, of this State and ascertain their opinion whether they wish to be married at a later age?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே அரசாங்கத்திற்குப் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம். மகளிர்களுடைய பிரதிநிதிகள் இங்கு இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்ளுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தாழ்த்தப்பட்ட ஜாதியில் திருமணம் செய்துகொண்ட மணமகன், மனைவியின் சம்மதமில்லாமல், மறுமணம் செய்து கொள்ளுகிறார். அந்த நிலையில் பெண்களுக்கு வசதி இல்லாத காரணத்தால் நீதி மன்றங்களுக்குச் செல்ல முடிவதில்லை. அவர்கள் நீதிமன்றங்களுக்கு செல்வதற்கு இலவசமாக வசதியளிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

திரு. ப. மகாதேவன் : காதலர் இருவர் கருத்தொருமித்து காதலி கருத்தறிக்கிற நேரத்தில், குறிப்பிட்ட வயது குறுக்கிடுகிற காரணத்தால், அந்தக் கல்யாணம் நடக்க முடியாதிருக்கும்போது விதி விலக்கு கொடுக்க வேண்டியிருக்கும், அல்லது குறிப்பிட்ட வயதிற்குக் கீழ் காதலிக்கக் கூடாது என்று சட்டம் இயற்ற வேண்டி வரும். இந்த நிலையில் பெண்களின் கல்யாண வயதை உயர்த்த மாட்டோம் என்று அமைச்சர் அவர்கள் உறுதி கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காதல் வயதை மட்டும் பொருத்தது என்று இந்த அரசாங்கம் கருதவில்லை. பொதுவாக, சமுதாயத்திலே ஒரு கட்டுப்பாடு வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வயது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை : ஐயா, கள்ளுக் கடை இருந்தால் குழந்தை கம்மியாகப் பிறக்கும் என்பது சர்க்காருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கள் குடித்தால் உணர்ச்சி வேறு பக்கத்திலே கொண்டுபோகப்படும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அதுபற்றி ஆராய்ச்சி அரசாங்கம் நடத்தவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, பெண்களின் திருமண வயது, சுயமரியாதைத் திருமணங்கள் ஆகிய இந்த இரண்டையும் இந்து மதத்தினுடைய சீர்திருத்தப் பணியிலே இந்த

சட்டங்களையெல்லாம் திருத்தியமைக்க அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்து மணச் சட்டத்தைச் சீர்திருத்தவேண்டும் என்ற எண்ணத்திலேதான் 1955-ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. இதிலே மேலும் திருத்தங்கள் வேண்டுமென்றால், அவற்றை மாநில அரசு பரிசிலிக்கத் தயாராக இருக்கிறது. கனம் உறுப்பினரும் அவருடைய யோசனையை தெரிவிக்கலாம்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister for Law to state whether the State Government has received any proposal from the Central Government regarding the age of marriage for girls?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பத்திரிகைச் செய்தி தவிர வேறு செய்தி எங்களிடத்தில் இல்லை.

பெருந்துறைக்குக் குடிநீர்

***61. வினு.—திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், ஈரோடு தாலுகாவில் காவிரியிலிருந்து பெருந்துறைக்குக் குடித் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதை நிறைவேற்றுவதில் காலதாமத மேற்படுவதற்குக் காரணங்கள் யாவை ?

(உ) அதன் மூலம் பயன் பெறும் பஞ்சாயத்துக்கள் எவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) & (உ) கீழ்க்கண்டுள்ள பஞ்சாயத்துக்களுக்கு நீர் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு 1967, ஜனவரி மாதத்தில்தான் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்வதில் காலதாமதம் ஏதுமில்லை.—

பெருந்துறை.

கருமாண்டி சொல்லிபாளையம்.

சென்னிமலை.

சித்தோடு.

குமிழம்பரப்பு.

கங்காபுரம்.

நசியனூர்.

ஊதுப்பட்டி.

ஈங்கூர்.